## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.119/2012

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜுலை மாதம் 13 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சாமிதாஸ் | மதம் | : கிருத்துவர் |
| த/பெ | : ஞானவரம் | ஜாதி | : -- |
| வயது | : 62 | கிராமம் | : அரும்பாக்கம் |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**13.07.2026**

**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 2ல் பிரதிவாதிகள்தான் குடிசை வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த குடிசை வீட்டின் நீள அகலத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த வீடு யார் எப்போது கட்டினார்கள் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். ஜெயராமன் பூர்வீகமாக அங்கு குடியுள்ளார். எந்த வருடம் கட்டினார் என்ற விவரம் தெரியாது என்றால் எனக்கு வருடம் தெரியாது. எனது 15 வயதில் இருந்து கதிர்கான், பொன்னன், ஜெயராமன், வேணு, ரத்தினம், ராமதாஸ், கோவிந்தம்மாள் ஆகியோர் பூர்வீகமாக குடியுள்ளார்கள்.

2. கதிர்கான் இறந்த போது எனக்கு என்ன வயதிருக்கும் என்றால் கதிர்கான் இறந்தது தெரியாது. பொன்னன், ஜெயராமன், வேணு, ரத்தினம் இறந்தது தெரியும். கதிர்கான் இறந்த விவரமே எனக்கு தெரியாத நிலையில் கதிர்கான் வழக்கு சொத்தில் குடியிருந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த குடிசை வீட்டின் நீளஅகலம் தெரியுமா என்றால் நீள அகலம் தெரியாது. 7 சென்ட் என்பது மட்டும் தெரியும். நான் பொய்யாக

சொல்கிறேன் என்றாலும் வழக்கு சொத்தில் வீடு இல்லை என்றாலும் உண்மையில் வீடு இருந்திருந்தால் அதை எந்த வருடம் கட்டினார்கள் என்பதும் அதன் நீளஅகலம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் சரியல்ல.

3. பொன்னன், ஜெயராமன், வேணு, ரத்தினம் ஆகியோர் எந்த தேதியில் இறந்தார்கள் என்றால் தேதி தெரியாது. ஆனால் அவர்கள் இறந்தது தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதியின் தாத்தா கதிர்கான் அனுபவித்து வந்து அவரது பெயரில் பட்டா சிட்டா இருந்ததாக சொல்லியிருப்பதில் அந்த பட்டா சிட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அது குடிசை வீட்டில் எரிந்துவிட்டது. பட்டா எண் தெரியுமா என்றால் புல எண்.124/14 ஆகும். பட்டா எண் தெரியாது. எந்த தேதியில் குடிசை வீடு எரிந்தது என்றால் தேதி தெரியாது. 15 வருடங்கள் இருக்கும். உண்மையிலேயே குடிசை வீடு 15 வருடங்களுக்கு முன்பு எரிந்து அதில் இருந்த பட்டா, சிட்டா ஆகியவை எரிந்திருந்தால் அதை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால் குடிசை எரிந்தது.

4. பொன்னன் அனுபவித்து வந்து அதன் பின்பு அவர் வாரிசுகள் அனுபவித்து வந்தார்கள் என்று சொல்லியுள்ளதில் பொன்னன் பெயரிலும் அவரது வாரிசுகள் பெயரிலும் ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் அவை எரிந்துவிட்ட பின்பு அரசுக்கு மீண்டும் மனு செய்துள்ளார்கள். பொன்னன் பெயரில் உள்ள ஆவணங்களும் எரிந்துவிட்டதா என்றால் ஆமாம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையிலேயே அவ்வாறு நடந்திருந்தால் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. பொன்னனை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அவர் இறந்து 27 வருடம் ஆகிறது.

5. வழக்கு தாக்கல் செய்த அன்னாளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் வழக்கு சொத்தில் 7 செண்ட் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் வாங்கவில்லை. எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள விவரங்களை படித்து சொல்ல

முடியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. 2008லேயே வாதி அன்னாள் வழக்கு சொத்தை பதிவு செய்த கிரைய ஆவணத்தின் மூலம் வாங்கி அனுபவித்து வருகிறார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் நான் சொல்லியுள்ள வழக்கு சொத்தின் பழைய புல எண்.124/9, புதிய புல எண்.124/14 0.7 செண்ட் நிலம் என்று நான் சொல்லியிருக்கும் விவரம் பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் புல எண்.124/14 ஜெயராமன் சொத்து, 124/9 கங்கா கோவிந்தன் என்பவர் கெங்கிரெட்டிக்கு 9 செண்ட்டை விற்றுவிட்டார்.

6. நான் மேற்சொன்ன எந்த விவரமும் ஜெயராமன் தனது எதிர்வழக்குரையிலேயே சொல்லவில்லை என்றாலும் நான்தான் தற்போது சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பழைய புல எண்.124/9, புதிய புல எண்.124/14 என்று சொல்வதுதான் உண்மையானது என்பதை காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். கோவிந்தன் புல எண்.124/14, புதிய எண்.124/19ல் 9 செண்ட்டை கோவிந்தன் கெங்கிரெட்டிக்கு விற்றதாக சொல்லியுள்ளதில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்ய சொன்னால் நகல் எடுத்து தாக்கல் செய்கிறேன். பத்திரம் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியவில்லை. நான் அந்த ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. நீதிமன்ற ஆணையர், நிலஅளவையர் வந்து வழக்கு சொத்தை பார்வையிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு நீதிமன்ற ஆணையர், நிலஅளவையர் தாக்கல் செய்த அறிக்கையில் அன்னாள் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் குடிசை போட்டுள்ளதாகவும் மற்ற பகுதியில் பயிர் செய்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றால் அப்படி அங்கு எதுவும் இல்லை. நீதிமன்ற ஆணையர், நிலஅளவையர் அறிக்கை தவறு என ஜெயராமன் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் அவர் ஆட்சேபணை

செய்தாரா என்பது எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 5ல் **"தாவா சொத்து வாதி அவருடைய பழைய சர்வே எண்.124/14ஐ பிரதிவாதியின் புதிய சர்வே எண்.124/14ன் ஒற்றுமையை பயன்படுத்தி பிரதிவாதிகளின் நிலத்தை அபகரிக்க முயற்சிக்கிறார்கள்"** என்று நான் சொல்லியுள்ள விவரத்தை பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் பணம் பெற்றுக்கொண்டு பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் வாதியின் வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)